# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

*(இலங்கை சமூகப்பணிக் கல்லூரி)*

*சமூகப்பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமாப் பாடநெறி*
*சிங்களம்/தமிழ் மொழி மூலம்-2011/2013*

*சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா 2011/2013 பாடநெறிக்கு மாணவ/மாணவிகளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த பாடநெறியின் நோக்கம் சமூக நலன்புரி மற்றும் சமூக அபவிருத்தி துறை தொடர்பான விஞ்ஞானபூர்வமான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு உள்ள சமூகப் பணியாளர்களை உருவாக்குவதாகும்.*

1. **அடிப்படைத் தகைமைகள் :**

(I) க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தி எய்தி இருத்தல் வேண்டும். (03 பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

அல்லது

(II) (அ) அரச அல்லது மாகாண சபை, அல்லது உள்ளூராட்சி சேயையில் கீழக்காணும் பதவி ஒன்றில் (அல்லது பல பதவிகளில்) 03 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

(i) சமூக சேவை திணைக்களத்தினதும், வறுமை நிவாரண திணைக்களத்தினதும், மாகாண சபை களினதும் சமூக சேவை உத்தியோகத்தர்.

(ii) நன்நடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக் கள நன்நடத்தை அதிகாரி, அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், விடுதியாளர்களும் உதவி விடுதியாளர்களும், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

(iii) சிறைச்சாலை திணைக்களத்தின் சிறைச்சாலைப் பாதுகாவலர் மற்றும் நலன்புரி அதிகாரி.

(iv) கூட்டுறவுத் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்திப் பரிசோதகர்கள்.

(v) பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கிராம உத்தியோகத்தர்.

(vi) கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கிராம அபிவிருத்தி அதிகாரி, உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி.

(vii) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோ கத்தர்கள், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத் தர்கள், உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள்.

(viii) கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், கைதொழில் பயிர்ச்செய்கைப் பகுதி, அரச சபைகளின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், நலன்புரி உத்தியோகத்தர்.

(ix) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.

(x) முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(xi) மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

(xii) அபிவிருத்தி உதவியாளர் (சமூக சேவைகள் திணைக்களம்).

(xiii) நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு).

(xiv) உளவளத்துணை உதவியாளர் (சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு).

(xv) சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்.

(xvi) முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்.

(xvii) கல்வி உயர் கல்வி அமைச்சின் அல்லது மாகாண சபைகளின் ஆசிரியர்கள்.

(xviii) மீன் பிடி நீர்வள அமைச்சின் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள்.

(xix) காணி ஆணையாளர் திணைக்களத்தின் குடியேற்ற அதிகாரி.

(xx) சுகாதார சேவை திணைக்களத்தின் பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார தாதிகள், சுகாதார திணைக்களத்தின் உள மருத்துவ சமூகப் பணியாளர் கள்.

(xxi) உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணைக்குழுவிலுள்ள சனசமூக அபிவிருத்தி அதிகாரி, உள்ளூராட்சி சபை அதிகாரி, நிவாரண அதிகாரி.

(xxii) அரச/அரச சார்பற்ற தனியார் துறைகளில் இதற்குச் சமனான பதவியிலுள்ள அதிகாரிகள்.

(xxiii) உள சுகாதார அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் (சுகாதார அமைச்சு)

(xxiv) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் சபையினால் அனுமதிக்குட்பட்ட மேற்கண்ட தகைமை கள் அல்லது அதற்குச் சமனான வேறு தகைமை களைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு :**

(i) மேற்குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு மேலாக உயர் கல்வித் தகைமைகள் அல்லது சமூக நலனோம்பு அபிவிருத்தி களத்தில் விரிவான அனுபவம் இருக்கும் விண்ணப்ப தாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும்.

*2.* **வயதெல்லை.**- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 20 வயதிற்குக் குறையாமலும், 46 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*3.* **வேறு நிபந்தனைகள் :**

(i) இப்பாடநெறி முழுமையாக இரண்டு வருடங்களைக் கொண்டிருப்பதால் ஏற்கனவே பணிபுரிபவர்கள், இப் பாடநெறிக்கு இணைந்து கொள்வதாயின் ஈராண்டுக்கும் தாம் பணிபுரியும் நிறுவனங்களிலிருந்து அல்லது திணைக்களங் களிலிருந்து விடுமுறை பெற்றுக் கொள்ளுதல் அவசியமாவ துடன், விடுமுறை பெறும் முழுப் பொறுப்பும் விண்ணப்பதாரி களுக்குரியதாகும்.

(ii) இப்பாடநெறி பின்பற்றும் காலத்தில் வேறு முழுநேரப் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது. அத்தோடு இப் பாடநெறி பயிலும் காலத்தில் நீங்கள் வேறு ஒரு முழுநேரப் பாடநெறியினைப் பின்பற்றுவ தாக அறியப்படின் நீங்கள் இப்பாடநெறியிலிருந்து நீக்கப்படுவீர்கள்.

*4.* பாடநெறியானது பின்வரும் நான்கு அரையாண்டுகளைக் கொண்டதாக அமையும் :-

(i) **முதலாவது வருடம் முதலாவது அரையாண்டு**
DSW 111-சமூகப்பணிக்கான அறிமுகம்
DSW 112-சமூக சூழல்
DSW 113-மானிட விருத்தியும், அபிவிருத்தியும்
DSW 114-தனிநபர் மற்றும் குடும்பங்களுடன் பணி செய்தல்
DSW 115-இலங்கையில் சமூக நலன்புரி சேவைகள்
DSW 116-களப்பயிற்சி I

(ii) **முதலாவது வருடம் இரண்டாவது அரையாண்டு**
DSW 121-சமூக குழுக்களுடன் பணி செய்தல்
DSW 122-சமூகப்பணி முரண்பாட்டுத் தீர்வு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல்.
DSW 123-இலங்கையில் சமூக பிரச்சினைகள்
DSW 124-பிரயோக ஆய்வு கூடம்
DSW 125-மனித உரிமைகளும், சமூகப்பணியும்.
DSW 126-களப்பயிற்சி II

(iii) **இரண்டாம் வருடம் முதலாவது அரையாண்டு**
DSW 211-சமுதாயத்துடன் பணி செய்தல்
DSW 212-சமூக நலன்புரி, நிர்வாகம் மற்றும் சமூகக் கொள்கைகள்
DSW 213-சமூகப்பணி ஆய்வு
DSW 214-மானிட வாழிடங்களில் சேவை வழங்குதல்
DSW 215-மானிட வாழிடங்களில் சேவை வழங்குதல் (களப்பயிற்சி)
DSW 216-உள நலமும், உளவளத்துணையும்
DSW 217-குற்றம், வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம்
DSW 218-இடர் முகாமைத்துவம்

(iv) **இரண்டாம் வருடம் இரண்டாவது அரையாண்டு**
DSW 221-களப்பயிற்சி III

* முதலாம் வருடம்.- முதலாவது வருடத்தில் முதலாம் அரையாண்டில் 05 பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் 288 மணித்தியால களப்பயிற்சி வழங்கப்படும்.

முதலாவது வருடத்தில் இரண்டாவது அரையாண்டில் 05 பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் 300 மணித்தியால களப்பயிற்சி வழங்கப்படும்.

* இரண்டாவது வருடம்.- இரண்டாவது வருடத்தில் முதலாவது அரையாண்டில் 08 பாடங்கள் கற்பிக்கப் படும்.

இரண்டாவது வருடத்தில் இரண்டாவது அரையாண் டில் முழுமையாக 960 மணித்தியால களப்பயிற்சி வழங்கப்படும்.

*5.* **டிப்ளோமா வழங்குதல்.**- கீழ்க் குறிப்பிடும் சகல விடயங்களையும் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப் படும் :-

(அ) சமூக அபிவிருத்தி செயற்றிட்ட களப்பயிற்சி உட்பட மேற்கண்ட எல்லாப் பாடங்களிலும் சித்தியடையதல்.

(ஆ) பாடநெறி மற்றும் களப்பணிகளுக்கு முழுமையாக சமூக மளிக்க வேண்டும். சிறந்த நன்நடத்தையுடனிருத்தல் மற்றும் டிப்ளோமா பெறுவதற்கு தகைமையுடையவர் என தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பரீட்சை சபை தீர்மானித் தல்.

*6.* பாடநெறிக்கு சேர்த்துக் கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் பிரதேசத்தைப் பொறுத்து பரீட்சை நடைபெறும்.

*7.* இந்த எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இறுதித் தீர்மானம் நிறுவனத்தின் அனுமதிச் சபையினால் எடுக்கப்படும்.

*8.* **பாடநெறி நடக்கும் மொழி மூலம் (தமிழ்/சிங்களம்) :**

*9.* **விண்ணப்பங்கள்.**- கீழ்காணப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கிணங்க, 11-1/2'' x 8-1/2'' அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை "பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயருக்கு வரையப்பட்ட ராஜகிரிய தபாலகத்தில் மாற்றக்கூடியவாறான ரூபா 100 பெறுமதியான காசுக் கட்டளையையும் இணைத்து, "பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல.488ஏ, நாவல வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு 2011.08.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தொழில் புரிவோரின் விண்ணப்பங்கள் அவரவர் மேலதிகாரி மூலமாக உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யாத மற்றும் குறித்த திகதிக்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

எம். ஏ. அல்லாம்,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
488ஏ, நாவல வீதி,
ராஜகிரிய.
2011, யூலை 06 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
**(இலங்கை சமூக சேவைக் கல்லூரி)**

சமூகப்பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமாப் பாடநெறி
சிங்களம்/தமிழ் மொழி மூலம் - 2011/2013

| | |
|---|---|
| | |
| | |

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-

 (i) தமிழில் :----.

 (ii) (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.

3. பால் (ஆண்/பெண்) :----.

4. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? :----.

5. பிறந்த திகதி :----.

 2011.08.22 ஆந் திகதியன்று வயது :----.

 வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

7. விலாசம் (தனிப்பட்டது) :-

 (i) (தமிழில்) :----.

 (ii) (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
 தொலைபேசி இல. :----.

 விலாசம் (அலுவலகம்) :-

 (i) (தமிழில்) :----.

 (ii) (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
 தொலைபேசி இல. :----.

8. வசிக்கும் மாவட்டம் :----.

9. வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :----.

10. எழுத்துப் பரீட்சைக்காக தாங்கள் தெரிவு செய்யும் மொழி மூலம் :
 ----.

11. கல்வித் தகைமைகள் :

| சித்தியடைந்த பரீட்சை | பாடங்கள் | தரம் | ஆண்டு: சுட்டி லக்கம் | மொழி மூலம் | பரீட்சைக் குத் தோற் றிய மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. க.பொ.த. (சா. த.)<br><br>சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9. | | | | |
| 1. க.பொ.த. (உ. த.) | 1.<br>2.<br>3.<br>4. | | | | |

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான குறைந்தபட்ச தகைமை பெற்றுள்ளீர்களா ? ஆம்/இல்லை :----.

3. பல்கலைக்கழகப் பட்டம் :

| பாடங்கள் | தரம் | ஆண்டு/ மொழி மூலம் | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

12. வேறு கல்வி தகைமைகள் அல்லது தொழில் தகைமைகள் :----.
 (i) :----.
 (ii) :----.
 (iii) :----.

13. தற்போதைய /முந்திய தொழில் விபரங்கள் :

| திணைக்களம் /நிறுவனம் | பதவி | கால எல்லை | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

14. வேறு தகைமைகள்.- (சமூக அபிவிருத்தி நலன்புரி சம்பந்தமான சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் போன்றவற்றில் விசேட திறமைகளும் /விருப்பங்களும் குறிப்பிடவும்.) (தேவையாயின் வேறு தாள்களை விபரங்களுக்குப் பயன்படுத்தவும்.)
 ..........................................................................................
 ..........................................................................................
 ..........................................................................................

